# எழுகதிர்

ELUKATHIR

ஐரோப்பிய பதிப்பு

Rs20 | Euro0.50

வாரஇதழ் | இதழ்: 43 | 28.05.2013


## சீனா மீண்டும் கடனுதவிகளை இலங்கைக்கு வழங்கத் தீர்மானம்!

இலங்கை அரசாங்கத்திற்கு சீனா மீண்டும் கடனுதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

சீன அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 580 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்கவுள்ளது.


இந்தக் கடன் தொகையுடன் சீன அபிவிருத்தி வங்கி மொத்தமாக இலங்கைக்கு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்கியுள்ளது. முக்கியமான கீழ்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த கடனுதவி பயன்படுத்தப்பட்வுள்ளது.

பாதை அபிவிருத்திக்கு 300 மில்லியன் டொலர்களும், நீர் வடிகாலமைப்புத் திட்டங்களுக்கு 200 மில்லியன் டொலர்களும், எஞ்சிய தொகை தேசிய வர்த்தக கல்வி நிறுவனத்தின் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளன.

# 13வது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த கூட்டமைப்பு கோரிக்கை!

முழு அளவிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

நீதி, காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அரசியல் சாசனத்தின் 13ம் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.



ஜாதிக ஹெல உறுமய கட்சி ஓர் சிங்கள பேரினவாத கட்சி எனவும், அதன் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென ஜாதிக ஹெல உறுமய அண்மையில் தெரிவித்திருந்தது. எனினும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (11ம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரம்!

### வழங்கவேண்டும் என்கிறார் ராஜித!!




வடக்கு மாகாண சபைக்கு 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களை வழங்க வேண்டும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்த மாகாண சபைத் தேர்தல் 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் கீழ் நடைபெறும் எனவும் அந்த மாகாணத்திற்கு அனைத்து அதிகாரங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், வட மாகாண சபைத் தேர்தல் (11ம் பக்கம் பார்க்க)

# 200 புலிகளுக்கு பொது மன்னிப்பு! கருணாவின் கோரிக்கை நிராகரிப்பு!

கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என



பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) விடுத்துள்ள கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. விமானங்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியவர்கள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், கிராமங்களுக்குள் புகுந்து கொலைகளை செய்தவர்கள் என பல வன்முறைச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சுமார் 200 விடுதலைப்புலிகள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு மாத்திரம் மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

## 96 சதுர கீலோ மீட்டரில் மட்டுமே கண்ணிவெடிகள் உள்ளன!



நிலக்கண்ணி வெடியகற்றும் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இன்னமும் 96 சதுர கிலோ மீற்றர் பகுதியில் மட்டுமே நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட உள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களில் (11ம் பக்கம் பார்க்க)

### 13வது திருத்தச்சட்டத்திற்கு எதிரான-----

# ஹெல உருமயவின் பிரேரணைக்கு அரசு அங்கீகாரம் வழங்காது!

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினால் முன் வைக்கப்படவுள்ள தனி நபர் பிரேரணை செல்லுபடியற்றதாகும். எனவே, அரசு மேற்படி பிரேரனைக்கு அங்கீகாரம் வழங்காது என்று மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்கு பாதுகாப்பு செயலாலர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது. தேசிய அரசியல் செயற்பாடுகள் குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்கும். இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

நட்புறவுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ்ப்பாணம் வரவேற்கின்றது

நல்லூர் பிரதேச சபையினால் ஒரு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.
நல்லூர் பிரதேச சபைத்தலைவர் வசந்த



குமார் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில், பிரதம அதிதியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டு வளைவினை திறந்து வைத்தார்.
1970ஆம் ஆண்டு யாழ் மாநகர சபை முதல்வராக இருந்த நாகராசா என்பவரால் இந்த வளைவு நிர்மாணிக்கப்பட்டது. யுத்த காலத்தில் இந்த வளைவு பல்வேறு சேதங்களுக்கும் உள்ளான போதும் ஏ - 9 வீதி அபிவிருத்தி பணியின் போது வீதி அகலிப்புக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த வளைவு இடிக்கப்பட்டது.
மீண்டும் நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி நிதியில் இருந்து ஒரு மில்லியன் ரூபா செலவில் இந்த வளைவு மீண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இந்த வளைவு திறப்பு விழா நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், ஈ.சரவணபவன், தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், மாநகர சபைஉறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மின் விநியோகம்

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி விவேகானந்தநகர் கிராமத்திற்கான மின் விநியோகத்திட்டம் கடந்த



வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கனக லிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.
400 குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் இந்தக் கிராமத்தில் முதற்தடவையாக மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 14 மில்லியன் ரூபா செலவில் மேற் கொள்ளப்பட்ட இந்த மின்சாரம் வழங்கும் நிகழ்வில் இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன், கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையின் வடக்கின் வசந்த மின் அத்தியட்சர் சமிந்த, கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சர் குகராஜ், கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமை யாளர் துரைராஜா மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கிழக்கில் வீட்டுத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்படும் வீட்டுத் திட்டம் கிழக்கில் கடந்த வாரம் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்ப்பற்று



பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதான மூன்று கிராமங்களில் இந்த வீட்டுத் திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.
இந்தியத் தூதர் அசோக் கே. காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், உற்பத்தித் திறன் விருத்தி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், பிரதித் தவிசாளர் எம்.எஸ்.எம்.சுபைர், ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, முன்னாள் முதல்வர் சி.சந்திரகாந்தன், முன்னாள் பிரதம மந்திரியின் ஆலோசகர் அலிஸாஹிர் மௌலானா உள்ளிட்ட பலரும் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் மங்களகம, பெரிய புல்லுமலை மற்றும் உறுகாமம் ஆகிய சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் கிராமங்களில் இந்த வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்ப ட்டது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 46 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட ஐயாயிரம் வீடுகளில் முறையே மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்திற்கு தலா 2 ஆயிரம் வீடுகளும் அம்பாறை மாவட்ட த்திற்கு ஓராயிரம் வீடுகளும் நிர்மாணிக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கணனி பயிற்சி நெறி

திருகோணமலை உயர் தொடர்பாடல் தொழிநுட்ப கல்வி சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆங்கிலம், கணினி பயிற்சிகள் முடித்தவர்களுக்கான



சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.
நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி முதன்மை விருந்தினராகவும், அமெரிக்க நிலையத்தின் ஊடகம், கல்வி, கலாசார அலுவல்கள் பணிப்பார் கிறிஸ்தோபர் தீல் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.
4 மாத காலம் பயிற்சியை பூர்த்திசெய்த 100 பேருக்கு இங்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இவர்களில் 50 இளைஞர்கள் மூதூர் கட்டைபறிச்சான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.
நிகழ்வின் முடிவில் இப்பயிற்சிக்கு நிதி வழங்கிய அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளருக்கு நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் வ.கலைச்செல்வன், கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி உடன் இணைந்த நினைவுச் சின்னமாக சான்றிதழ் ஒன்றினையும் வழங்கி வைத்தார்.



எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# அழுத்தங்களின்றிய தெரிவு அவசியமானது!

வடமாகாணசபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று அரசாங்கம் திட்டவட்டமான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அவரது அறிவிப்பில், வட மாகாணத்துக்கான தேர்தல் திட்டமிட்டவாறு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கின்ற போதிலும் அதுகுறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும். இவ்விவகாரம் தொடர்பாக தேவைப்பட்ட நேரத்தில் அரசாங்கம் உரிய முடிவுகளை மேற்கொள்ளும் என்றும் அவர் நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் தொடர்பான அறிவிப்பில் எந்த விதமான மாற்றமும் கிடையாது என்பதை ஜனாதிபதியும் திட்டவட்டமாக தெரிவித் துள்ளதாக ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைக்கு 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களை வழங்க வேண்டும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்த மாகாண சபைத் தேர்தல் 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் கீழ் நடைபெறும் எனவும் அந்த மாகாணத்திற்கு அனைத்து அதிகாரங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு எனவும் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தினதும் நிலைப்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இரண்டு அமைச்சர்கள் வடமாகாணசபைத் தேர்தல் செப்டம்பரில் நடத்தப்படும் என்ற உறுதியான தகவலை வெளியிட்டுள்ளார்கள். இந்தத் தேர்தலுக்கு நிறுத்தப்படும் வேட்பாளர்கள் தொடர்பான தகவல்கள் வெளி வருவதற்கு இன்னும் காலஅவகாசம் உள்ளது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இந்தத் தேர்தலில் வேட்பாளரை முன்னிறுத்தும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

வடக்கு மக்கள் தேர்தலில் எடுக்க நிலைப பாடுகள் தமிழ்மக்களுடைய தலைவிதியை தீர்மானிக்கக்கூடியதாக அமையவுள்ளது.

இதுவரை தமிழ்மக்கள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்காக என்ன செய்தார்கள்? எதனைப் பெற்றுக் கொடுத்தார்கள்? என்பதற்கான கூட்டல் கழித்தல் கணக்குகளைப் பார்க்கவேண்டிய தருணத்தில் வடக்கு மக்கள் உள்ளார்கள்.

இவர்களின் வாக்குவங்கிகளே இவர்களது எதிர்கால நலன்களை நிச்சயிக்கும் காரணிகளாக இருக்கப் போகின்றது.

இங்குள்ள வடக்கு மக்களில் பெரும்பாலானோர் புலம் பெயர் தேசங்களில் வாழும் தம் உறவுகளில் தங்கி வாழ்ப வர்களாகவே இருக்கின்றனர். இந்தத் தேர்தலில் புலம்பெயர் மக்கள் யாருக்கு வாக்களிக்கும படி வடக்கு மக்களுக்கு கட்டளையிடப். போகின்றார்களோ தெரியவில்லை.

அங்கு வாழும் அவர்களது பார்வைகள் இங்குள்ள தேர்தல் வேட்பாளரைத் தேர்ந்தெடு ப்பதற்கு உதவப்போவதில்லை. அவர்களது கணிப்புக்கள் அவர்களது நலன் சார்ந்ததாகவே அமையும். ஆனால் இங்குள்ள மக்களோ தமக்கான தலைமையை தேர்ந்தெடுப்பதற்கு முன்னிறுத்தும் வினாக்கள் வேறுபட டவையாகவே அமையும்.

இதுவரை நாம் கடந்து வந்த யுத்த நிலைமைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆண்டுகள் நான்கு கடந்துவிட்ட நிலையில் வடமாகாணசபைக்கு வரவிருக்கும் தேர்தலில் நாம் தேர்ந்தெடுக்கப்போகும் தலைமை தொடர்பாக நாம் ஒன்றுக்கு பல தடவைகள் சிந்தித்து நமக்கான சபீட்சத்தை வழங்கக்கூடிய ஒரு தலைமைக்கு வாக்களிப்பதற்கு நாம் உறுதி பூணவேண்டும். இதற்காக மற்ற வர்களின் அழுத்தங்கள் தலையீடுகளை தவிர்த்து நாம் சுதந்திரமான முறையில் வாக்களிப்பதற்கு இப்போதிருந்தே நம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

# வடக்கு தேர்தல் திட்டமிட்டபடி: பீரிசும் பாராளுமன்றில் அறிவிப்பு!

வடமாகாணத்துக்கான தேர்தல் திட்டமிட்டவாறு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கின்ற போதிலும் அதிகுறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.



இவ்விவகாரம் தொடர்பாக தேவைப்பட்ட நேரத்தில் அரசாங்கம் உரிய முடிவுகளை மேற்கொள்ளும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசியர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் செவ்வா ய்க்கிழமை ஐ.நா. அறிக்கை மற்றும் வடக்கு, கிழக்கின் காணி விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்கு பதிலளித்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் இங்கு மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொண்டுவந்துள்ள பிரேரணையை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இங்கு சுட்டிக்காட்டப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தையோ தருஸ்மன் அறிக்கையையோ எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் அவை அந்தந்த நாடுகளின் அரசியல் தேவைகளுக்காக கருதப்பட்ட அம்சங்களை கொண்டுள்ளதாக அமைந்துள்ளன. ஆதனாலேயேதான் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென கூறுகின்றேன்.

இந்த நாட்டில் பிறந்த நாம் வெளிநாட்டவரின் அறிக்கைகளுக்கு ஒருபோதும் அடிபணியத் தேவையும் இல்லை. அடிபணியவும் மாட்டோம்.

கடந்த வருடம் எமது நாட்டிற்கு எதிராக ஐ.நா.வில் அறிக்கை கொண்டுவரப்பட்டது. சர்வதேசத்தின் அழுத்தத்தின் ஊடாக அரசாங்கத்தை அழித்து அதனூடாக அதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என்று ஐ.தே.க. நினைக்கக்கூடாது. அவ்வாறு ஒருபோதும் இடம்பெறப் போவதில்லை. அரசியல் அமைப்பில் திருத்தம் தேவையெனில் அது பாராளுமன்றத்தின் ஊடாகவே இடம்பெற வேண்டும். கூட்டு அரசாங்கம் என்ற ராதியில் அரசாங்கத்துக்குள் பல்வேறு அரசியல் கட்சிகள் இணைந்திருந்திருக்கின்றன. அத்தகைய கட்சிகள் தமது கருத்தை முன்வைப்பதற்கான ஜனநாயக உரிமை இருகிக்கின்றது. 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஒருசாரார் இதனை இல்லாதொழிக்க வேண்டுமென்றும், மறுசாரார் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள இச்சட்டத்தை அவ்வாறு இல்லாதொழிக்க முடியாதென்றும் மற்றுமொரு சாரார் 13வது திருத்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கூறுகின்றனர். எனினும் இது குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இவ்விவகாரம் தொடர்பாக தேவைப்பட்ட நேரத்தில் அரசாங்கம் உரிய முடிவுகளை மேற்கொள்ளும்.

வடமாகாண சபைக்கான தேர்தல் குறித்து இங்கு கேள்விகள் எழுப்பப்பட்டன. வடமாகாகாண சபைக்கான தேர்தல் திட்டமிட்டவாறு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும். இதில் எந்தமாற்றமும் கிடையாது. ஜனாதிபதியும் இது குறித்து அறிவித்துள்ளார் என்றார்.

# மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடக்குமாம்!

வட மாகாணசபைத் தேர்தல் செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் உத்தேசிக்கப்பட்டவாறு நடத்தப்படக் கூடிய சாத்தியம் கிடையாது என எதிர்க்கட்சிகளும் ஏனைய தரப்பினரும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், வடமாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டவாறு எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடத்தப்படும் என அரசாங்க பதில் பேச்சாளர் அமைச்சர் அனுரபிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தின் காணி காவல்துறை அதிகாரங்களை ரத்து செய்து அதன் பின்னர் தேர்தலை நடாத்த உத்தேசித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், வடமாகாணசபைத் தேர்தல்களை



ஒத்தி வைக்கும் எந்தவிதமான திட்டங் களும் அரசாங்கத்திற்கு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH

# DOMINICAN REPUBLIC ARRESTS LANKANS IN SMUGGLING CASE

## Sri Lanka and India mull visa on arrival

by Manjula Fernando

Sri Lanka and India have agreed to a bilateral consular dialogue to discuss the visa on arrival that would lead to a visa-free regime between the two countries.

India's High Commissioner in Colombo Ashok K. Kantha said that Sri Lanka and India must work towards a visa-free regime since a two-way flow of tourists reinforces friendly ties between the two countries.

He said India's policy has been to facilitate Sri Lankan travellers to India with a liberal visa regime for all types of travellers – pilgrims, tourists and the business community with almost everyone being issued visas within one working day.

"We are progressively moving towards a visa on arrival regime with some countries," he said adding that Sri Lanka is one of them. Asked if the visa free travel between the two countries would be a reality, he said that it is definitely within the realm of possibility and this is something we need to encourage." He said the Government will work out the modalities of the arrangement.

"But that's an objective we need to move towards. Especially, between two friendly countries such as India and Sri Lanka, we should have a very smooth movement of people, goods, ideas and investment. This is something we need to encourage," he said.

He said Sri Lanka should also be more ambitious in tapping the Indian tourist sector.

"Indians are travelling overseas in larger numbers."

Nearly one-fifth of foreign tourist arrivals in Sri Lanka are from India. Kantha said the number of tourists from India to Sri Lanka at present is a small fraction of the actual figure.

"If more than one million Indians can travel to Singapore and Thailand every year, I don't see why the number of Indian tourists visiting Sri Lanka should be less than 200,000, since Sri Lanka has so much to offer as a tourist destination.

(courtesy- Sunday observer)

The National Investigations Department (DNI) arrested members of a people trafficking network with possible links to international terrorist cells, who used Dominican Republic as a bridge from Cuba, France, Spain, Sri Lanka and Haiti.

DNI chief operating officer Fidel Paulino identified the Sri Lankan- Canadian Karunanithy Nallathamby as the group's leader, arrested in Sosua, Puerto Plata, while Kanthaany Siresh or Sriram Kannan, and Ganesh Mahenderan, or David Kristen and Kohulan Selvarasa, were detained in a house where they had hidden during two months.

The DNI said Nallathamby had stolen original passports from a passport office in Canada to alter them and sell to Indian nationals who entered Dominican territory along the border with Haiti.

In a press conference on Wednesday, the official said Nallathamby had been operating in the country during eight months, but came and went regularly to Canada where he came with four and five passports called "machetes" according to his own statements.

Paulino said the preliminary information shows that the network 's leader managed to smuggled more than 60 people into the country, mostly from the Middle East, whose whereabouts are being investigated. "They were then taken to Sosua where they stayed two months and then was sent to the United States and Canada via the various airport terminals in the country, particularly through Las Americas International Airport."

He said the head of the network trafficked persons to the United States and Europe, with criminal cases pending in their home country using Dominican Republic as a bridge.

He said to enter Dominican territory, network members Siresh, Ganesh and Selvarasa used the Sri Lanka-France route, then to Haiti, and from there to this nation, while the Sri Lankan Karunanithy went to Spain, from there to Cuba and then Dominican Republic via Haiti, and once in the country, to Sosua; Puerto Plata.

"The variation of this route is because the members of this network at all times sought to throw off Dominican Republic's security and immigration agencies," Paulino said.

The authorities reportedly want to know if the network had any links or accomplices in the military services at the border and the airports.

Paulino added that last September Siresgh tried to leave the country via the Puerto Plata Aiport, using the forged passport JG495041, registered to the Canadian Tulsie Ran Budhran, but evaded and to escape from the agents.

(Courtesy : dailymirror.lk)

## Airconditioned trains to Kandy

by Ranil Wijayapala

The Railway Department will tomorrow launch its first train service with airconditioned compartments for passengers travelling between Kandy and Colombo, after its first run from Kandy to Colombo, General Manager of the Railways B.A.P. Ariyaratne told the Sunday Observer.

"We are launching this airconditioned train service targeting the crowds visiting Kandy during the weekends", he said.

After the train service begins tomorrow from Kandy to Colombo, it will run between Colombo and Kandy from Friday evening to Monday morning and passengers who travel on this train should reserve their seats in advance.



According to the schedule, the train will start its run from Colombo Fort on Friday, Saturday and Sunday at 5.50 p.m. and leave Kandy at 5.50 a.m. on Saturday, Sunday and Monday.

"At present we have scheduled this train only on weekends and it will be extended to other days depending on the demand for the service", Ariyaratne said.

He said the Railway Department is making arrangements for passengers to reserve their seats even one month ahead, deviating from the current reservation process that enables passengers to reserve seats only two weeks in advance.

He said the train service will be more comfortable for passengers to travel between Colombo and Kandy and the fee will be Rs.500 per one way journey as it is first class. Around 220 seats are available.

He said the Department is launching this new train service apart from the normal intercity train between Colombo and Kandy.

"This will also be an intercity train service as it will stop only at Peradeniya, Ragama and Gampaha", he said.

"We expect this service to be a boon for the tourism industry in the country and it will also be a tourist attraction" he said.

(courtesy- Sunday observer)

DEUTSCH

## Beim CHOGM ersetzt vielleicht Charles die Queen

Zum ersten Mal seit 1973 wird die Queen nicht bei dem Treffen der Regierungsleiter des Commonwealth dabei sein, wie Sky News erfahren hat.

Quellen sagen, dass Prinz Charles dabei ist, als das Mitglied der königlichen Familie benannt zu werden, welches an ihrer statt in Sri Lanka spatter in diesem Jahr an dem Treffen teilnehmen wird.

Es ist unklar, warum die Queen, welche das Oberhaupt des Commonwealth ist, sich dazu entschlossen hat, nicht dabei zu sein, aber viele werden die Entscheidung als Teil einer Bewegung zum Transferieren einiger Verantwortlichkeiten an ihren Erben sehen.

Die britische Monarchin wurde früher in diesem Jahr ins Krankenhaus gebracht, da sie an Symptomen einer Gastroenteritis litt, aber es ist nicht bekannt, ob diese Entscheidung auf gesundheitliche Gründe zurückgeht.

Und wenn das CHOGM Ereignis 2015 in Großbritannien stattfindet, dann werden viele Fragen, ob die Queen, die zu der Zeit 89 sein wird, wahrscheinlich noch an einem weiteren solcher Treffen in ihrer Lebenszeit teilnehmen wird.

Die Führer der 54 Commonwealth Nationen treffen sich alle zwei Jahre, um kollektiv die globalen Probleme zu diskutieren und sich darüber abzustimmen. Die Queen war bei dem letzten CHOGM Treffen in Perth, Australien, 2011 anwesend.

.

Letztes Jahr repräsentierten die jüngeren Generationen der königlichen Familie die Queen in den Übersee-Staaten als Teil ihrer diamantenen Jubiläumsfeiern.

Buckingham Palace wird wahrscheinlich vorschlagen, dass Prinz Charles in Sri Lanka anwesend ist, was einfach eine Fortsetzung seiner gesteigerten Rolle in der Familie ist.

Aber einige sagen wahrscheinlich voraus, dass diese Entwicklung den Weg für den



Prinz of Wales bereit machen wird, damit er das nächste Oberhaupt des Commonwealth wird, obwohl die Rolle nicht automatisch an den ältesten Sohn der Queen fällt.

Dies folgt auch Kommentaren von Australiens Premierministerin Julia Gillard, die es unterstützt, dass Charles die Commonwealth Rolle übernimmt, obwohl sie es vorzieht, in Richtung einer Republik zu geben, wenn die Queen einmal nicht länger auf dem Thron ist.

Fr. Gillard sagte im März: "Was Australienb betritt, so bin ich sicher, dass der Nachfolger der Queen eines Tages mit der selben hervorragenden Haltung wie es Ihre Majestät getan hat, als Leiter des Commonwealth dienen wird.

In einer Fernsehbotschaft, die an ihrem 21. Geburtstag in Kapstadt aufgenommen wurde, sagte die damalige Prinzessin Elizabeth dem Commonwealth: „Ich erkläre Ihnen allen, dass mein ganzes Leben, sei es lang oder kurz Ihrem Dienst gewidmet sein soll, sowie dem Dienst unserer großen imperialen Familie, zu der wir alle gehören."

Man denkt jedoch nicht, dass die Abwesenheit der Queen beim Treffen im Nowember mit Empfindlichkeiten wegen Sri Lankas Menschenrechtsbericht – der Kanadas Premierminister Stephen Harper dazu gebracht hat, den CHOGM zu boykottieren - verbunden ist.

(Mit freundlicher Genehmigung : http://colombogazette.com)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் முஸ்லிம்களின் நிலை?

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சம் இருக்கின்றது என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் உளப்பூர்வமாக அக்கறை கொண்டிருக்கிறார்கள். அதேநேரம் அவ்வாறு வழங்கப்படுகின்ற எந்தவொரு தீர்வும் இன்னும் ஒரு சிறுபான்மையான முஸ்லிம்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக ஆக்கிவிடக் கூடாது. என்பதை சிந்திக்கத் தெரிந்த சகலரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவது தொடர்பில் அரசியல் அரங்கில் எழுந்துள்ள புதிய சர்ச்சை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்;

இது குறித்து அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு தொடர்பாக விபரிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

"13வது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணி பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2 தசாப்தங்கள் கடந்த நிலையிலும் இன்னும் அவ்வதிகாரங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

அதேநேரம் வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறுவதற்கான உத்தியோகபற்றற்ற அறிவிப்புக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமா என்ற தலைப்பு வடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஒருபுறம் தீவிரவாத போக்குடைய பேரினவாத அமைப்புக்கள் அவை நீக்கப்பட வேண்டும் என்றும், சிறுபான்மைகளுக்கு மத்தியில் இருந்து அவை நீக்கப்படக்கூடாது என்ற கருத்துக்களும் பலமாக மோதிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் துரதிஸ்ட வசமாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதனால் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சாதக பாதகங்கள் தொடர்பாக எவரும் வாய் திறப்பதாக தெரியவில்லை.

முஸ்லிம்களின் பிரதான கட்சி என்று தங்களை அழைப்பவர்கள் ஒரு தலைப பட்சமாக இவ்வதிகாரங்கள் வழங்கப்படுவதனால் முஸ்லிம்களுக்கு ஏதாவது சாதக சூழ்நிலை இருக்கின்றதா? அல்லது ஆக்கக்குறைந்தது பாதகம் இல்லாமலாவது இருக்குமா என்பது தொடர்பாக இதுவரை எந்தவொரு விளக்கத்தினையும் அளிக்கவில்லை.

அதேநேரம் ஆங்காங்கே முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் சில பேனா பிடிப்பவர்களும் காணி பொலிஸ் அதிகாரம் பறிக்கப்படுமானால் அது சிறுபான்மையினருக்குச் செய்கின்ற துரோகம் என்ற பொதுமையான வசனத்தை மாத்திரம் பாவிக்கின்றார்களே தவிர அது தொடர்பாக முஸ்லிம்களுக்கு ஏற்படுகின்ற சாதக பாதக விளைவுகள் தொடர்பாக எந்த விளக்கத்தையும் அளித்ததாகத் தெரியவில்லை.

இன்று முஸ்லிம்கள் ஒருவித மூளைச்சலவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு ஒரு புறம் தங்களை முஸ்லிம்களின் பிரதான கட்சி என்று அழைப்பவர்கள் யுத்த நிறுத்த காலத்திலிருந்து சில மேற்கத்தேய சக்திகளின் பின்னணியில் தொடர்சியாக முஸ்லிம்களுக்கு ஏற்படும் விளைவுகள் பற்றி கருத்துக் கூறாது மட்டுமற அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக தொடர்ச்சியாக செய்யப்பட்டு வந்த பிரச்சாரமும் மறுபுறத்தில் சில ஊடகங்கள் தமிழ் தரப்பிற்கு சாதகமானவற்றை சிறுபான மைகள் என்ற வரைவிலக்கணத்திற்குள் பொதுமைப்படுத்தி செய்து வந்த பிரச்சாரமுமாகும்.

இதன் விளைவாக இன்று முஸ்லிம்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களினால் தமக்கு ஏற்படப்போகும் தாக்கங்கள் என்ன? என்ற கேள்விகளைக் கூட தமக்குள் எழுப்ப மறந்து அதிகாரப்பகிர்வில் குறைப்புச் செய்வது சிறுபான்மைகளுக்கு எதிரான செயல். எனவே அது முஸ்லிம்களுக்கும் எதிரான செயல் என்ற ஒரு பார்வையை தன்னகத்தே கொண்டு இருக்கின்றார்கள்.

பொலிஸ் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் இன்று பாதுகாப்பு தொடர்பாக எழுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் ஒரேயொரு ஜனாதிபதியைத்தான் அனுக வேண்டும். ஆட்சியில் இருக்கின்ற ஜனாதிபதி சிறுபான்மைகளை அரவணைத்துச் செல்கின்ற ஒருவராக இருந்தால் சிறுபான்மைகள் தமது பாதுகாப்பு தொடர்பாக கவலைப்பட வேண்டிய தேவையே இருக்காது.

மாறாக சிறுபான்மை விரோதப் போக்குடைய ஒருவர் ஜனாதிபதியாக இருந்தாலும் சிறுபான்மைகள் தமது பலத்தை ஒன்று சேர்த்து மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்கின்ற பொழுது அவர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அதன் கணிசமான தாக்கத்தைச் உள்வாங்கியே தீர வேண்டும்.

அதேநேரம் சிறுபான்மைகளுக்குள் இருக்கின்ற தனித்தனி சமூகங்களை எடுத்துக் கொண்டாலும் அவர்களின் முழுப்பலமும் மத்தியில் ஒன்று சேர்கின்றபொழுது அது எதிர்க்கட்சியானும், ஆளும் கட்சியானாலும் சரி அதுவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்தியே தீரும். அதே நேரம் மத்திய ஆட்சியாளர்கள் என்னதான் வீறாப்பு பேசினாலும் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அல்லது அபிப்பிராயங்களுக்கு ஓரளவுக்காயினும் வளைந்து கொடுத்துத் தான் ஆக வேண்டும்.

இலங்கையில் இனவாதக் குழுக்கள் அண்மையில் ஏற்படுத்திய பிரச்சாரங்கள் இலங்கையும் ஒரு மியன்மாராய் மாறி விடுமோ என்ற அச்சத்தை முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. அதேநேரம் ஆட்சியாளர்களே இதன் பின்னணியில் இருக்கின்றார்கள் என்றதொரு பலமான குற்றச்சாட்டும் இருந்தது. ஆனால் எது எவ்வாறாயினும் நிலமை இந்தளவுக்காவது கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கு பல கோணங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட வெளியுலக மற்றும் உள்ள அழுத்தங்கள்தான் காரணம் என்று கூறினால் அந்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது ஒரேயொரு திசையை நோக்கி என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மாறாக இவ்வதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பொழுது இதேபோன்றதொரு சூழ்நிலை உருவாகுமானால் இதே அழுத்தங்கள் ஒன்பது திசையை நோக்கி செயற்படுத்தப்பட வேண்டியிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, ஒரு ஜனாதிபதியை அனுக வேண்டிய இடத்தில் 9 முதலமைச்சர்களை அனுக வேண்டியிருக்கும். எல்லா முதலமைச்சர்களும் சிறுபான்மைக்கு



Y.L.S. Hameed

ஆதரவான போக்குடையவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. மட்டுமல்லாமல் சிறுபான்மைகளின் சனச்செறிவு குறிப்பாக முஸ்லிம்களின் சனச்செறிவு கிழக்கிற்கு வெளியே எந்தவொரு மாகாணத்திலும் குறிப்பிடளவு தாக்கத்தைச் செலுத்தக் கூடிய நிலையில் இல்லாத சூழ்நிலையில் அம்முதலமைச்சர்கள் பெரும்பான்மையை திருப்திப்படுத்துவதில்தான் குறியாக இருப்பார்கள். இந்நிலையில் சிறுபான்மைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும்.

13வது அரசியலமைப்புத் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படாத நிலையில் மாகாண சபைகளின் தாக்கம் இன்னும் இலங்கையில் பூரணமா உணரப்படவில்லை. காணி பொலிஸ் அதிகாரங்களுடன் முழுமையாக அமுல்படுத்தப்படுகின்ற பொழுது கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களின் நிலைமை சட்டிக்குள் போட்ட கறியைப் போன்றதாக இருக்கும். பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்ததன் பின்பு மத்திய அரசாங்கமும் நினைத்த மாத்திரத்தில் தலையிட முடியாது. சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களும் மத்திய அரசாங்கத்தில்தான் தாக்கத்தைச் செலுத்துமே தவிர மாகாண சபைகளில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்த மாட்டாது. எனவே எல்லாம் நடந்து முடிந்ததன் பின்புதான் மத்திய அரசாங்கமும் வந்து என்ன நடந்தது. என்று கேட்கின்ற நிலை வரும்.

அதேநேரம் 22 வருடம் அகதி வாழ்க்கை வாழ்ந்து மீண்டும் திரும்பிவந்த மக்களுக்கு தமது குடியிருப்பு காணிகளும் பறிபோன நிலையில் குடியிருக்க மாற்று காணிகளும் இல்லாத நிலையில் காட்டையாவது துப்பரவு செய்து வாழுவோம் என்று சென்ற மக்களுக்கு அங்கு ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்புக்களும், தடைகளும் முஸ்லிம்களின் கண்களை அகலத் திறந்திருக்கின்றன.

இந்நிலையில் காணி பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுகின்ற பொழுது வட பகுதி முஸ்லிம்களின் எதிர்காலம் பாரிய கேள்விக்குறியாகி விடுமோ? என்ற அச்சம் இருக்கின்றது.

மறுபுறத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் காணிகள் தமிழ் தரப்பினரிடையேதான் பறிபோயிருக்கின்றன. அதேநேரம் அவற்றை மீட்டெடுப்பதற்கான முயற்சிக்கு தடைக்கற்களாகவும் தமிழ் பிரதிநிதித்துவங்களே செயற்படுகின்றன.

அண்மையில் விடுதலைப் புலிகளின் காலத்தில் கல்குடாத் தொகுதியில் பறிபோன முஸ்லிம்களின் காணிகளை மீழ் வரையறை செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் எவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பலத்த எதிர்ப்பினைத் தொடர்ந்து செயற்படுத்த முடியாமல் போயின என்பது நாடறிந்த விடயமாகும்.

எனவே தான் காணி, பொலிஸ் அதிகார விடயத்தில் முஸ்லிம்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. தமிழ் மக்களின் உணர்வுகள் உள்வாங்கப்படுகின்ற அதேவேளை முஸ்லிம்களின் எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகாத வகையில் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

எனவே, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இது தொடர்பாக விரிவான கலந்துரையாடல்களை சமூகத்தின் பல மட்டங்களிலும் செய்ய இருக்கின்றது. அதனைத் தொடர்ந்தே தமது இறுதியான நிலைப்பாட்டை தெரிவிக்குமே தவிர சில முஸ்லிம் அரசியல் கட்சிகள் தெரிவிப்பது போன்று வட மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தால் என்ன இல்லா விட்டால் என்ன?

தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அதேபோன்று முஸ்லிம்கள் எக்கேடு கெட்டால் என்ன காணி பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டே ஆக வேண்டும். அதனைத்தான் மேற்கத்தேய சக்திகளும் எதிர்பார்க்கின்றன என்ற நிலைப்பாட்டை எம்மால் எடுக்க முடியாது" என்றும் ஹமீட் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 6

# "இரக்கமற்ற படுபாவிகள் அவர்கள்"

**கடந்த வாரத் தொடர்ச்சி**
**நமது நிருபர்கள் எஸ்.ஜே. இதயா மற்றும் ஏ.ஏ. சாமி ஆகியோர் வவுனியா மற்றும் புதுகுடியிருப்பு பகுதிகளில் அவர்கள் பார்த்தவற்றையும், பலரிடம் பேசியவற்றையும் பகிர்ந்து கொள்கிறார்கள்....**

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் விரும்பி இருந்தவர்களும் சரி, வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டவர்களும் சரி, போரின் இறுதிக்கட்டத்தில் ராணுவத்தின் ரிஸீவிங் பாயின்ட்டுகளுக்கு சிவிலியன்களோடு சிவிலியன்களாக வந்து சரண்டர் ஆனார்கள். ஆனால், ராணுவத்தினர் அந்தப் புலிகளை அடையாளம் கண்டுபிடித்து பிரித்தெடுக்க உதவியது யார் தெரியுமா?

சரணடைந்த மக்கள் கூட்டத்தை நோக்கி, "ஒரு மணி நேரம் புலிகள் இயக்கத்தில் பணிபுரிந்திருந்தாலும் அவர்கள் தனியே வந்து விடுங்கள். விசாரணைக்குப் பிறகு விடுவித்து விடுவோம்" என்று ராணுவம் அறிவித்துள்ளது. பெரும்பாலும் கடைசி நேரத்தில் வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்ட இளைஞர், இளம்பெண்கள் எழுந்து உண்மையை ஒப்புக் கொண்டு சரண் அடைந்துள்ளனர்.

ஆனால், பல ஆண்டுகள் இயக்கத்தில் இருந்தவர்கள் ஒப்புக் கொள்ளாமல் அமைதியாக இருந்துள்ளனர். அந்த நிலையில் பொதுமக்களே எழுந்து, 'இதோ இவன்தான் என் மகனை இயக்கத்துக்குத் தூக்கிக் கொண்டு போனவன். அதோ அவன்தான் என் மகளை இயக்கத்துக்கு இழுத்துக் கொண்டு போனவன்' என்று சரமாரியாகக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கடைசி நேரத்தில் அந்தத் தமிழ் மக்கள், புலிகள் மீது எவ்வளவு கோபத்தில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இது மிகப் பெரிய சான்று. வலுக்கட்டாயமாக இயக்கத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்களும், தங்கள் பங்குக்குச் சக புலிகளைக் கணிசமாகக் காட்டிக் கொடுத்துள்ளனர்.

சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிகள் இவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11 ஆயிரம் பேர், கடந்த மூன்று ஆண்டுகளில் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டு, தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது வவுனியாவிலுள்ள முன்னாள் புலிகளின் மறுவாழ்வு மையத்தில் இருப்பது சுமார் 350 பேர் மட்டுமே. பெண்கள் மையத்தில் சுமார் 20 பேர் மட்டுமே இருக்கிறார்கள். இந்த மறுவாழ்வு மையத்தில் இவர்களுக்கு ஒரு வருடத்தில் ஆங்கிலம், சிங்களம், கம்ப்யூட்டர் மற்றும் விருப்பமான தொழில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அதன்பின் விடுவிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் ஏற்கெனவே அனுமதி பெற்றிருந்ததால், வவுனியாவில் உள்ள அந்தப் பெண்கள் மறுவாழ்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டோம். நுழைந்ததுமே நம்மை வரவேற்றது, சின்ன குடிசை சைஸிலிருந்த ஒரு பத்ரகாளியம்மன் கோவில். ஹிந்துக் கோவில்களை ராணுவம் இடிக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு நடுவே, ராணுவ முகாமிற்குள்ளேயே ஹிந்துக் கோவில் இருந்தது எங்களை வியப்படைய வைத்தது. (ராணுவம் இந்தக் கோவிலை அனுமதித்தது மட்டுமல்ல; அந்தக் கோவிலை அவர்களும் வணங்குவது உண்டு - என்று எங்களிடம் தெரிவித்தனர் அங்கிருந்த முன்னாள் பெண் புலிகள்.)

அந்த முகாமில் இருந்த முன்னாள் பெண் புலிகள், ஒரு வித சலிப்புடனே எங்கள் முன் வந்து அமர்ந்தனர். நாங்கள் தமிழகப் பத்திரிகையாளர்கள் என்று தெரிந்த பிறகு, முக மலர்ச்சியோடு பேச ஆரம்பித்தனர். "நான்கு வருடங்களாக விசாரிப்பு, விசாரிப்பு என்று, கேட்டதையே பலமுறை கேட்டு எங்களுக்குப் போரடித்து விட்டது. இங்கு மறுவாழ்வு மையம் வந்த பிறகுதான், தற்போது நிம்மதியாக இருக்கிறோம். இப்போது, மறுபடி யாரோ சந்திக்க வருகிறார்கள் என்றதும், விசாரணைக்குத்தான் வருகிறார்களோ என்று சலித்துப் போனோம். நல்லவேளை இது



நீங்களாக இருக்கிறீர்கள்" என்று அவர்கள் பெருமூச்சு விட்டனர்.

இதனாலேயே அவர்களிடம் அதிகமாகக் கேள்விகள் கேட்காமல், அவர்கள் போக்கிலேயே பேச விட்டோம். "தமிழகத்தில் மாணவர்கள் போராடுவதைத் தொலைக் காட்சிகளில் பார்த்தோம். நாலைந்து வருடங்களுக்கு முன்னால் போராடியிருந்தால் ஏதாவது பலன் இருந்திருக்கும். இப்போது காலம் கடந்து, எல்லாம் முடிந்த பிறகு போராடி என்ன பயன்?" என்றார்கள் சலிப்போடு.

அந்தப் பெண்களில், ஐந்து வருடங்களுக்கு மேலாக இயக்கத்தில் இருந்த பெண்கள் நாலைந்து பேரை மட்டும் தேர்வு செய்து தனியே பேசினோம். "இயக்கத்தில் விரும்பித்தான் சேர்ந்தோம்" என்றார்கள்.

"தனி நாடு கிடைக்கும்; அங்கு நிம்மதியாக வாழலாம் என ஆசைப்பட்டு, புலிகளின் பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டு இயக்கத்தில் இணைந்தோம். முழுப் பயிற்சி எடுத்து சயனைட் குப்பிகளும் மாட்டிக் கொண்டுதான் இயக்கத்தில்



இருந்தோம். ஆனால், ஜெயிக்க முடியாது; தோற்று போவோம் என்பது தெரியத் தெரிய எங்களுக்கு ஆர்வம் குறைந்தது. அப்பாவி மக்களின் உயிரிழப்புகள் அதிகமான போது, எங்கள் மனதில் மாற்றம் ஏற்படத் துவங்கியது. எங்களது படைகள் பின்வாங்கப் பின்வாங்க நாங்கள் உறவினர்களோடு நெருங்க ஆரம்பித்தோம். அவர்களும் 'இனி வெல்ல முடியாது; எங்களோடு வெளியே வந்து விடு' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். 'புலிகளும் சரண் அடையலாம். கொல்ல மாட்டோம்' என்று ராணுவம் அறிவித்ததை நம்பி சரணடைந்தோம். அதனால் இன்று உயிரோடு இருக்கிறோம்" என்றார்கள் அவர்கள்.

"தடுப்புக் காவல், சிறை என்று ஓரிரு வருடங்கள் துன்பம் அனுபவித்தாலும், இப்போது நிம்மதியாக இருக்கிறோம். இன்னும் ஓரிரு மாதங்களில் வெளியே சென்று விடுவோம். அதன் பின் சுதந்திரமாக வாழ்வோம்" என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

"நாங்கள் சரணடையச் செல்லும் முன், 'எங்களைக் கொன்று விடுவார்கள்; பாலியல் பலாத்காரம் செய்து விடுவார்கள்' என்றெல்லாம் ஒருவித அச்சம் எங்கள் மனதில் இருந்தது. ஆனாலும், வேறு வழியில்லாமல் சரணடைந்தோம். ஆனால், அந்த மாதிரி எந்த கெட்ட சம்பவங்களும் எங்களுக்கு நடக்கவில்லை. இங்கே நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோம். எங்கள் பிறந்த நாளை ராணுவத்தினரே கொண்டாடுகிறார்கள். தீபாவளி, கிறிஸ்துமஸ், தமிழ் வருடப் பிறப்பு போன்ற எல்லா பண்டிகைகளையும் கொண்டாட இங்கு ஏற்பாடு செய்து தருகிறார்கள். அன்றைய தினங்களில் எங்கள் உறவினர்களை இங்கு வரவழைத்து, அவர்களும் எங்களோடு உணவருந்தி மகிழ அனுமதிக்கிறார்கள். உண்மையில் நாங்கள் இங்கு நிம்மதியாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

அப்படி கூறிய அவர்கள், ஓடிப் போய், அது குறித்த ஃபோட்டோ ஆல்பத்தையும் எடுத்து வந்து எங்களிடம் காட்டினார்கள். ஒரு முன்னாள் பெண் புலிக்கு, ராணுவமே திருமணம் செய்து வைத்துள்ளது. அங்கிருந்த ஒரு பெண்ணின் சிறு வயது மகனும், அப்பெண்ணுடனே முகாமில் தங்கியுள்ளான். அவனை ராணுவமே படிக்க வைக்கிறது. அந்தக் குழந்தை, அங்குள்ள பெண் ராணுவ அதிகாரிகளுக்கெல்லாம் செல்லப் பிள்ளையாக திகழ்கிறான். அவனது பெயர் சூட்டு விழாவையும் ராணுவமே தமிழர் மற்றும் ஹிந்து முறைப்படி நடத்தி வைத்துள்ளது.

'தமிழீழம் கிடைக்காமல் போனதில் வருத்தமா?' என்ற கேள்வியையும் அந்த முன்னாள் புலிகளிடம் நாங்கள் வைத்தோம். "வருத்தம் இல்லாமல் எப்படி இருக்கும்? ஆனால், ஈழம் கிடைக்கவில்லை என்பதற்காக இங்குள்ள தமிழினமே அழிந்து போக வேண்டும் என்று நினைக்க முடியுமா? எத்தனையோ விஷயங்களுக்கு வாழ்க்கையில் ஆசைப்படுகிறோம். அவை கிடைக்கவில்லை என்பதற்காக உடனே உயிரையா விடுகிறோம்? ஏமாற்றத்தை ஏற்றுக் கொண்டு வாழ்வதில்லையா? அப்படித்தான் இதுவும். பலரின் வாழ்க்கையையும், உடல் அங்கங்களையும், மன நிம்மதியையும் இழக்கச் செய்தது போதும். திரும்ப தமிழீழம் என்று ஆரம்பித்துக் குழப்பங்களை உருவாக்கக் கூடாது.

(7ம் பக்கம் பார்க்க)

## ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டனவா?



ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் எல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றப்படுகின்றன என்பது புலி ஆதரவாளர்கள் வைக்கும் பிரதான குற்றச்சாட்டுகளில் ஒன்று. இது குறித்து ஒரு பட்டியலையும் சிலர் வெளியிட்டுள்ளனர். இது பற்றி நாங்கள் அங்குள்ள சிலரிடம் விசாரித்தோம். "இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல ஊர்களுக்கு சிங்களத்திலும் பெயர்கள் உண்டு. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, அந்த ஊர்ப் பலகைகள் எல்லாம் தமிழில் மட்டுமே இருந்தன. தற்போது அரசாங்கம் எல்லா ஊர்களின் பெயரையும் ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளில் எழுதியுள்ளது.

"உதாரணமாக தமிழில் 'ஆனையிரவு' என்று சொல்லப்படும் ஊருக்கு ஆங்கிலத்தில் 'Elephant Pass' என்றும், சிங்களத்தில் 'அலிமாண்டுகடுவா' என்றும் பெயர் உண்டு. எல்லாவற்றிற்குமே 'யானைகள் கடக்கும் இடம்' என்றுதான் அர்த்தம். எனவே, மும்மொழிப் பெயர்களையும் பயன்படுத்தத் துவங்கியுள்ளார்களே தவிர, தமிழ்ப் பெயர்களை எல்லாம் அழித்து விட்டார்கள் என்பது கொஞ்சம் கூட உண்மையல்ல. ஒரு சில இடங்களில் மட்டும் புலிகள், தங்களது மாவீரர்கள் பெயரைச் சில நகர்களுக்கும், தெருக்களுக்கும் சூட்டியிருந்தனர். அந்தப் பெயர்கள் மட்டுமே முழுமையாக நீக்கப்பட்டுள்ளன" என்றார்கள் சிலர். நாங்கள் பார்த்த ஊர்களின் பெயர்ப் பலகைகள் எல்லாம் மூன்று மொழிகளிலும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்'-6

# "இரக்கமற்ற படுபாவிகள் அவர்கள்"

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அது முடிந்து போன கதை. இனி சாத்தியமில்லாத விஷயம்" என்றார்கள் உறுதி கலந்த குரலில்.

சிறுவர், சிறுமியரை புலிகள் வலுக் கட்டாயமாக இழுத்துச் சென்று இயக்கத்தில் சேர்த்தது பற்றி அவர்களிடம் கேட்டோம். இயக்கத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்த பெண் (பெயர் நீக்கப்பட்டுள்ளது.) அது குறித்துப் பேசினார். "நான் சேர்ந்த காலத்தில் எல்லாம் இளைஞர்கள் இயக்கத்தில் விரும்பி வந்து சேர்ந்தனர். இயக்கத்தினர், 'வீட்டுக்கு ஒரு பிள்ளையை இயக்கத்துக்குக் கொடுங்கள்' என்று வேண்டுகோளாக பிரச்சாரம் செய்வார்கள். வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல மாட்டார்கள். அதன் பிறகு ஒரு கட்டத்தில் 'வீட்டுக்கு ஒரு பிள்ளை' என்பதைக் கட்டாயமாக்கினார்கள்.

"2004-க்குப் பிறகு, தோல்விகள் தொடரத் தொடர கண்ணில் பட்ட எல்லா சிறார்களையும் இயக்கத்துக்கு இழுத்துக் கொண்டு போகும் நிலை ஏற்பட்டது. தாய் மார்கள் அழுது கொண்டே பின்னால் ஓடி வருவார்கள். மனசுக்குக் கஷ்டமாக இருக்கும். 'உன் பிள்ளையைப் போர் முனைக்கு அனுப்ப மாட்டோம். மற்ற வேலைக்குத்தான் வைத்துக் கொள்வோம் போ' என்று அந்தத் தாய்மார்கள் துரத்தப்படுவார்கள். பாவமாக இருக்கும். சிலர் மண்ணை அள்ளித் தூற்றி விட்டுக் கூடப் போவார்கள்" என்று பேசிக் கொண்டே போனவர், திடீரென உடைந்து கண் கலங்கியபடி "மறக்க விரும்புகிறேன்... எல்லாவற்றையும் மறக்க விரும்புகிறேன். மன்னியுங்கள்" என்று தலையை கவிழ்த்துக் கொண்டார்.

அவரை ஆறுதல்படுத்தி புதிய வாழ்க்கைக்கு வாழ்த்துச் சொல்லி அவரை தைரியப்படுத்தினோம். அதன்பின் அவரிடம் நாங்கள் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. 'அரசியல் ரீதியான தீர்வுக்காகப் பல வாய்ப்புகள் வந்தபோதும், புலிகள் இயக்கம் அதை நழுவ விட்டதே... அப்போதெல்லாம் அது தவறு என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?' என்று மற்றவர்களிடம் கேட்டோம்.

"இது சரி, இது தவறு என்று சொல்லும் அளவுக்கெல்லாம் எங்களுக்கும், தலைமைக்கும் தொடர்புகள் கிடையாது. எங்களுக்கு என்ன உத்தரவு வருகிறதோ, அதைச் செய் வோம். அவ்வளவுதான். இறுதிப் போர் நடந்த கால கட்டத்தில், எங்களுடன் இருந்த தமிழ் மக்களே எங்களை வெறுத்துத் ஊற்ற ஆரம்பித்தபோதுதான், தலைமையின் உத்தரவுகளுக்கு முரண்பட ஆரம்பித்தோம். நாங்களே எங்களுக்குள் பேசி வைத்து ராணுவத்திடம் சரணடைந்து விட்டோம்" என்றார்கள் அவர்கள்.

இறுதிக் கட்டப் போரின்போது, புலிகளைப் பொதுமக்களே தூற்றினார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், புதுக்குடியிருப்பு நகரில் நாங்கள் சந்தித்த இளைஞர் ஒருவர் புலிகள் மீது அப்படி ஒரு கோபத்தோடு எங்களிடம் பேசினார். "என் வயதில் நீங்கள் ஒரு இளைஞனை இங்கு சந்தித்தால், அவன் போர் நேரத்தில் வெளிநாட்டுக்குத் தப்பிப் போனவனாகவோ, அல்லது வெளிமாகா ணங்களுக்குத் தப்பிப் போனவனாகவோதான் இருப்பான். இங்கு இருந்திருந்தால் அவன் இயக்கத்திற்கு இழுக்க ப்பட்டு போருக்குப் பலி கொடுக்கப்பட்டிருப்பான். நான் தப்பிப் பிழைத்தது பேரதிசயம். என்னை நான்கு முறை இயக்கத்துக்கு இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள். ஒவ்வொரு முறையும் தப்பி வந்தேன். தப்பி வந்தால் என் வீட்டுக்குப் போக முடியாது. எங்காவது ஒரு வீட்டில் பதுங்கி இருப்பேன். சாப்பிடக் கூடப் பணம் இருக்காது. இதனால் திருடனானேன். களவாடித்தான் பல நேரம் பசியாறினேன். திரும்ப வேறு ஊரில் என்னைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

"இயக்கத்திலிருந்து தப்பி ஓடியவன் என்று அடையாளம் தெரிவதற்காக, எனக்கு மொட்டை போட்டு விட்டார்கள். அப்படியும் தப்பிப் போனேன். புலிகள் முகாமில் பல சிறார்கள் அழுதபடி கிடப்பார்கள். அவர்களிடம் எல்லாம் பேரம் பேசினேன். 'உன்னை உன் வீட்டில் கொண்டு போய் விட்டால் எனக்குப் பணம் பெற்றுத் தர வேண்டும். உன் வீட்டில் எனக்கும் அடைக்கலம் தர வேண்டும்' என்றெல்லாம் பேரம் பேசி அவர்களையும் என்னுடன் அழைத்துக் கொண்டு தப்பிப் போயிருக்கிறேன். அதேபோல், சில வீடுகளில் பணமும் பெற்றேன். சில வீடுகளில் அடைக்கலமும் அடைந்தேன். 'எல்லோரையும் கொன்னுட்டுத் தனி நாடு வாங்கி யாரைக் குடியமர்த்தப் போகிறீர்கள்' என்று கோபத்தில் புலிகளிடம் கேள்விகள் கேட்டு, அவர்களிடம் அடி கூட வாங்கியிருக்கிறேன்.

"சுதந்திராபுரத்தில் ரிஸீவிங் பாயின்ட் அமைக்கப்பட்டு 'நோ ஃபயரிங் ஸோன்' என்று ராணுவம் அறிவித்ததும், மக்கள் சந்தோஷத்தோடு புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து கூட்டமாக வெளியேறினார்கள். நானும் அவர்களோடு போனேன். வரிசையாக எல்லோரும் போய்க் கொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மக்களிடையே ஒரு பெண் புலி, மனித வெடிகுண்டாக வெடித்துச் சிதறினார். அந்த வெடியில் பொதுமக்கள் பலர் அங்கேயே விழுந்து மடிந்தனர். பலர் உடல் உறுப்புகளை இழந்து ரத்த வெள்ளத்தில் துடித்தனர். நல்லவேளையாக எனக்கு எதுவும் ஆகவில்லை. கீழே விழுந்ததோடு சரி, விழுந்த எல்லோரும் எழுந்து பின்புறமாக ஓடினோம். அப்போது எதிர்த்து வந்தது ஒரு மோட்டார் சைக்கிள். திடீரென அந்த மோட்டார் சைக்கிளும் அந்த ஆண்புலியோடு வெடித்து சிதறியது. மேலும் பலர் செத்தார்கள். மேலும் பலர் உடல் உறுப்புகளை இழந்து ரத்த வெள்ளத்தில் துடித்தார்கள். இதில்தான் எனக்கு முதுகுபுறத்தில் காயங்கள் ஏற்பட்டன. அந்த இரு மனித குண்டுகள் வெடித்ததும், ராணுவம் பின்வாங்கிப் போய் விட்டது. விடுதலைக்காக ஆசையுடன் சென்ற நாங்களும் பழையபடி புலிகளின் எல்லைக்குள்ளேயே திரும்பி வர வேண்டியதாயிற்று.

"அப்புறம் மற்றொரு கட்டத்தில்தான் நான் ரிஸீவிங் பாயின்டுக்கு தப்பி வந்தேன். நான் ஒரு தமிழன். நான் சொல்கிறேன்... இலங்கை ராணுவத்தை விடப் பல மடங்கு கொடியவர்கள் விடுதலைப் புலிகள். அவர்கள் தலை மையில் ஒரு நாடு அமைந்திருந்தால், அது சுடு



காடாகத்தான் தமிழர்களுக்கு இருந்திருக்கும். இரக்கமற்ற படுபாவிகள் அவர்கள்" என்று ஆவேசமாகப் பேசிய அந்த இளைஞரை, நாங்கள் சந்தித்தது தற்செயலாகத்தான். புதுக்குடியிருப்பு நகரத்தில் ஒரு சின்ன ஜவுளிக் கடையில் துணி வாங்கிக் கொண்டிருந்த இரு பெண்களிடம் பேச்சுக் கொடுக்கலாம் என்று நாங்கள் சென்றபோது, அதே கடை வாசலில் பைக்கில் வந்து இறங்கினார் அந்த இளைஞர். சுமார் 25 வயது இளைஞர் என்பதால், அவர் தமிழீழத்துக்கு ஆதரவாக பேசக்கூடும். அவரது கருத்தையும் கேட்கலாம் என்ற எண்ணத்தில்தான் அவரிடம் பேச்சுக் கொடுத்தோம். ஆனால், அந்த இளைஞரோ கொட்டித் தீர்த்து விட்டார். "நான் வெளிநாடு சென்று சம்பாதிக்கும் ஐடியாவில் இருக்கிறேன். ஆனால், புலிகள் மனித வெடி குண்டாக வெடித்தபோது, என் முதுகின் மேற்புறத்தில் ஏற்பட்ட காயத்தின் தழும்புகள் இன்னமும் இருக்கின்றன. வெளிநாடு செல்லும்போது, நான் இலங்கைத் தமிழர் என்று யாராவது சந்தேகப்பட்டு என்னைச் சோதனையிட்டால், இந்த வெடிக்காயங்களைப் பார்த்து, என்னை விடுதலைப் புலி என்று நினைக்கக் கூடும். எனவே, அந்தப் பகுதியில் பச்சை குத்தியிருக்கிறேன் பாருங்கள்" என்றபடி எங்கள் காருக்குள் வந்து சட்டையைக் கழட்டி முதுகை காட்டினார் அந்த இளைஞர். (அவரது எதிர்கால நலன் கருதி, நாங்களே அவரது பெயரையும் முகத்தையும் தவிர்த்துள்ளோம்.)

நாங்கள் கிளம்பும்போது, "நீங்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள். நான் சொன்னதை நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, நான் சொன்னதை நீங்கள் எழுதுவீர்களோ இல்லையோ தெரியாது. ஆனாலும்... என்ற ஊரில் ஒரு அரசு ஆஸ்பத்திரி உள்ளது. அங்கு..... என்ற பெயரில் ஒரு ஆம்புலன்ஸ் டிரைவர் இருக்கிறார். அவரது குடும்பத்தை மட்டும் தவிர்க்காமல் சந்தித்து விட்டுப் போங்கள்" என்று கூறி வழியனுப்பி வைத்தார் அந்த இளைஞர்.

உடனே அந்தக் குடும்பத்திடம் அப்படி என்ன தகவல் இருக்கிறது என்பதை அறியும் ஆசை எங்களுக்குள் எழுந்தது. அந்த ஊரை நோக்கி காரைச் செலுத்தச் சொன்னோம்.

(தொடரும்)

## இன அழிப்பு முயற்சியா?

இலங்கையில் தமிழின அழிப்பு முயற்சி நடந்ததாகத் தமிழகத்தில் பலமான குற்றச்சாட்டு ஒன்று வைக்கப்படுகிறது. அது பற்றி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்துக் கூறினார். "இங்கு நடப்பது எதையும் அறியாத தமிழக அரசியல்வாதிகள், புலம் பெயர்ந்த தமிழர்கள் திட்டமிட்டுப் பரப்பும் வதந்திகளை எல்லாம் அப்படியே நம்புகிறார்கள். இன அழிப்பு என்றால் சரணடைந்த 12 ஆயிரம் புலிகளை ராணுவம் கொன்றிருக்கலாம். கிழக்கு மாகாணமும், யாழ்ப்பாணமும் எப்போதோ புலிகள் வசமிருந்து ராணுவத்தின் வசம் வந்துவிட்டன. அங்கெல்லாம் தமிழர்களை ராணுவம் கொன்று போட்டிருக்கலாம். ஆனால், அப்படியெல்லாம் நடக்கவில்லை. இறுதிக் கட்டப் போரின்போது சுமார் 3 லட்சம் தமிழர்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்களை எல்லாம் ராணுவம் கொன்று அழித்து விடவில்லை. புலிகளோடு நடந்த யுத்தத்தில், அவர்கள் அரணாக நிறுத்தி வைத்த பொதுமக்களில் பலர் இறந்ததைத் தவிர, ராணுவம் பிற பகுதி தமிழர்கள் யாரையும் வேண்டுமென்றே திட்டமிட்டு அழிக்கவில்லை. பிறகு எப்படி இது இன அழிப்பாகும்?" என்று கேள்வி எழுப்பினார் அவர்.

## இலங்கையில் சீனர்கள் ஆதிக்கம்?

'சீனர்கள் ஆதிக்கம் இலங்கையில் அதிகமாகி விட்டது?' என்ற வதந்தி இந்தியாவில் நிலவுகிறது. இலங்கையில் ஆறு நாட்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மட்டக்களப்பு, கண்டி என்று பல நகரங்களில் சுற்றினோம். மருந்துக்குக் கூட ஒரு சீனர் எங்கள் கண்ணில் படவில்லை. இது பற்றிக் கொழும்புவில் சிலரிடம் விசாரித்தோம். "மத்திய இலங்கையையும் வட இலங்கையையும் இணைக்கும் எக்ஸ்பிரஸ் ஹைவே வேலையைச் சீன அரசாங்கம் செய்து கொடுக்கிறது. அங்கு போனால் அந்த வேலையில் ஈடுபடும் சீனர்களைக் காணலாம்" என்றார்கள்.

ஆக, சீன அரசாங்கத்தின் மறைமுக ஆளுமை இலங்கையில் இருக்கக் கூடும். ஆனால், நேரடியாகச் சீனர்களின் பங்களிப்பு இந்த அளவுக்குத்தான் இருப்பதாகத் தெரிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு காணி விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு!

வடக்கு காணி விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்வதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. வடக்கு காணிப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான இணைப்புச் செயலக இலங்கைப் பிரதிநிதி அசென் கேயா ஒயூ, யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளுக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருவதாக யாழ் கட்டளைத் தளபதி விளக்கமளித்துள்ளார். பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கு வலிகாமம் காணிகள் சுவீகரிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சில தரப்பினரும் ஊடகங்களும் காணி சுவீகரிப்பு தொடர்பில் பிழையான தகவல்களை பிரச்சாரம் செய்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் பிரசன்னம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, வடக்கு காணி சுவீகரிப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உத்தியோக பூர்வமாக கேள்வி எழுப்பியதா என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை.

வலி.வடக்கில் காணிகள் சுவீகரிப்பில் அரசு உறுதியாக உள்ளதை ஐக்கியநாடுகள் சபை பிரதிநிதிகளிடம் விளக்கினார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க. காணிகளை இராணுவம் அல்ல அரசே சுவீகரிக்கிறது என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான ஒருங்கிணைந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரி மற்றும் பிரதித் தலைமை அதிகாரி மார்க்பிரசோபா ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹந்துரு சிங்கவை கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பலாலியில் சந்தித்துப் பேசினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட யாழ்.



தளபதி ஹத்துருசிங்க,

இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் அவர்களின் னண்டுதலில் சில ஊடகங்களும் வலி.வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை படையினர் கையகப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

உண்மையில் அந்தக் காணிகள் பலாலி விமானம் நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் விஸ்தரிப்புக்காக அரசால் சுவீகரிக்கப்படுகின்றது என சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்தில் படைகளை தொடர்ந்து வைத்திருப்பதற்கு சிறிய அளவு நிலப்பரப்பு சுவீகரிக்கப்படுகின்றது என்றும், அரசியல் கட்சிகளால் சொல்லப்படுவதைப் போல அந்தப் பகுதிகளில் பெருமளவிலான மக்கள் காணிகளை இழக்கவில்லை எனவும் அதன் உண்மையான அளவு அவர்கள் குறிப்பிடுவதை விட குறைவு என்றும் ஹத்துருசிங்க ஐ.நா. பிரதிநிதிகளிடம் கூறினார்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களை கடற்கரையோரமாக அரச காணியில் குடியேற்ற ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். சுவீகரிக்கப்படும் காணிகளில் பெரும்பான்மையானவை அரச திணைக்களங்களுக்குரிய காணிகள் என்றும் யாழ். தளபதி கூறினார்.

# தமிழகத்தில் இலங்கையர்

## குடும்பத்தைக் கொன்று தற்கொலை!

இந்தியாவின் தமிழக மாநிலத்தில், இலங்கையர் ஒருவர் குடும்ப உறுப்பினர்கள் மூன்று பேரை கொலை செய்து, தாமும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தாய், மனைவி மற்றும் மகளை இவ்வாறு குறித்த இலங்கையர் கொளராமன முறையில் படுகொலை செய்துள்ளார்.

மூன்று பெண்களும் கழுத்து அறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 48 வயதான சீ.சுந்தரேசன் என்பவரே இவ்வாறு மூன்று பேரைக் கொலை செய்து தாமும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த நபர் சென்னைக்கு சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் தொல்லை காரணமாக இவ்வாறு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பிததுள்ளனர்.

# 78 தனியார் பாடசாலைகளை அரசாங்கம் கண்காணிக்கும்!

அரசாங்கத்தின் அனுசரணையில் இயங்கும் 78 தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் மீதான கண்காணிப்பை அதிகரிப்பதற்கான பொறிமுறையை அரசாங்கம் விரைவில் அறிமுகம் செய்யும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளின் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபா வரையிலும் செலவளிக்கின்றது. இதனைவிடவும் பெருமளவில் இலவச புத்தகங்களையும் வழங்குகின்றது. ஆயினும் இவர்களை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பாடசாலைகளில் ஒரு தவனை கட்டணமாக 30 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரையிலும் அறவிறப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளில் 1,25,000 மாணவர்கள் இருக்கின்றனர். நாங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கின்றோம்.

இலவச புத்தகங்களையும் கொடுக்கின்றோம். இருப்பினும் பெற்றோர் அளவுக்கு அதிகமான கட்டணத்தை செலுத்தவேண்டியுள்ளது. இவைகள் தொடர்பில் யாரும் பேசுவதில்லை. எதிர்க்கட்சியினர் அரசாங்க பாடசாலைகளை மட்டும் விமர்சிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தமிழ் முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்!

## ஆசாத் சாலி வேண்டுகோள்!

தமிழ் முஸ்லிம் சமூகங்கள் சில முக்கிய பொதுவான விடயங்களில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டில் தமிழ் பேசும் சிறுபான்மை சமூகங்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. எந்தவொரு பிரச்சினைக்கும் ஆட்சியாளர்களிடம் உரிய தீர்வு



இருப்பதாகவும் தெரியவில்லை.

இவ்வாறான ஒரு சூழலில் அண்மைக் காலங்களாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள மிகப் பாரிய பிரச்சினைகளுள் ஒன்றான காணி அபகரிப்பு பிரச்சினைக்கு அந்த மக்கள் சார்பாக, தங்களது கட்சி மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கை ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களைப் போன்றே முஸ்லிம் மக்களும் இந்த காணி அபகரிப்பு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் துரதிஷ்டவசமாக இந்த விடயத்தில் யாரும் அவர்களுக்கு இதுவரை உதவ முன் வந்ததாகத் தெரியவில்லை.

நீங்கள் மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கையில் முஸ்லிம்களோடு தொடர்புபட்ட காணி அபகரிப்பு விடயங்களையும் இணைத்துக் கொண்டு இரண்டு சமூகங்களும் எதிர்நோக்கியுள்ள பொதுவான பிரச்சினையாக முன்னெடுத்துச் சென்றால் அது மேலும் வலுவுடையதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வட மாகாண சபையும் பொலிஸ் அதிகாரமும்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டே ஆகும் என்பதற்கான சமிக்கைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இந்த நிலையில் 13 வது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டே வட மாகாண சபை அமைக்கப்படுமா? என்பது குறித்து பலவிதமான அரசியல் முனைகளில் இருந்தும் விவாதங்கள் வடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றன. காணி போலிஸ் அதிகாரங்களுடன் "வட மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டால் நான் அமைச்சு பதவியை னக்கி வீசுவேன்" என்று விமல் வீரசிங்கா குட்டையை குழப்பி விட்டதில் இருந்து இவ்விவாதங்கள் தொடக்கி இருக்கின்றன. 13வது அரசியல் அமைப்பு திருத்தத்தை நீக்குவதற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருக்கும் ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இத்தகைய அறிவிப்புகள் தமிழர் தரப்பு அரசியல் வாதிகளுக்கு குறிப்பாக தமிழ் வடமாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

★வடக்கு தேர்தலை ஒத்திவைத்து மாகாண சபை முறைமயியில் அதிகாரக் குறைப்பை மேற்கொள்ள முற்பட்டால் நிலைமை மோசமடையுமென கம்யூனிஸ் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இக்கருத்துக்கள் பற்றி நமது தலைவர்கள் வரவேற்பதோ ஆதரிப்பதோ இல்லை. நமக்கு சாதகமான கருத்து சொல்பவர்களை அவர்களின் கருத்துகளை பலப்படுத்தும் முயற்சியில் தமிழ் சமுகத்தின் புத்திஜீவிகளோ, சமுக நல அமைப்புகளோ தீவிரம் காட்டுவதில்லை.ஜெனிவாவுக்கு பிட்டிசம் அனுப்பும் ஆண்டகைகள் சிங்கள தரப்பில் உள்ள முற்போக்குவாதிகளை ஒருபோதும் ஆதரிப்பதில்லை. எவர் எதிர் கருத்து கொண்டிருக்கின்றாரோ அவரை நோக்கியே எம்மிடம் எறிகணைகள் தயாராக இருக்கின்றன. பல கட்சிகளின் தயவில் ஆட்சி நடத்திவரும் அரசில் பல கட்சிகளின் பங்கு இருக்கும். அதில் ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்துக்களை கொண்டிருப்பது சாத்தியம்.அதுவே ஜனநாயகத்தின் வெளிப்பாடு.ஆகும்.அதை வைத்து கொண்டு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சம் இருக்கின்றது" என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம்



அரச சார்பு கட்சி என்று ஒதுக்கிவிட முடியாது. அதே போன்று "மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அரசாங்கத்தை எச்சரிப்பது எனது பொறுப்பு என்றும், இன்னமும் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரல் தொடர்கின்ற சூழலில் அவர்களின் கைகளில் பொலிஸ் அதிகாரங்கள் கிடைப்பது தேசிய பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக அமையும்" என நாட்டின் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய தெரிவித்துள்ளார்.இதுகூட ஏன் இப்படி சொல்ல முடிகின்றது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்று வெளிநாடுகளில் இருந்து ஒரு தரப்பினர் இயங்கி கொண்டிருக்கும் வரைக்கும் இது போன்ற அச்சங்கள் சிங்கள மக்களிடையே எழுவதற்கு நியாயம் இருக்கின்றது.எனவே புலம் பெயர் தமிழர்கள் நாடு கடந்து செய்யும் கோமாளித்தனங்கள் இலங்கையில் மீளுயிர்ப்பு பெற்று வருகின்ற தேசிய ஒற்றுமைக்கும்


தேசிய கூட்டமைப்பினருக்கு நல்ல பிரச்சார வாப்புக்களை வழங்கியிருக்கின்றன.தங்களது அறுபது வருட அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்கென்று ஒரு செங்கல்லை தானும் வாங்கித்தர முடியாத வாய்ச்சொல் வீரர்களாகிய கூட்டமைப்பினருக்கு இந்த இனவாதிகளின் புரளிகள் வட மாகாண சபை தேர்தல் வரை அறிக்கை மட்டும் விட்டு கொண்டே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கி இருக்கின்றன .அதேவேளை அரசில் அங்கம் வகிக்கும் மிக முக்கியமான தலைவர்கள் இந்த அதிகாரங்கள் வழங்கபடுவதன் அவசியம் குறித்து பேசியிருக்கின்றார்கள்.குறிப்பாக

★கடற்றொழில் நீரியல்வள அமை ச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்திற்கு அமையவே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் இதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்குமென்றும்கூறியிருக்கிறார்.

★அமைச்சரவையின் பதில் பேச்சாளரான அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா 13ஆவது திருத்தம் நீக்கப்படாமலேயே



முழு சிங்களவர்களும் எம்மை அடக்கி ஆளவே பார்க்கின்றார்கள் என்று பிரச்சாரம் செய்ய முனைவது பிழைப்பு வாதத்தின்



வெளிப்பாடு ஆகும்.இந்த நிலையில் தான் "13வது திருத்தப் பிரேரணையை மாற்றம் செய்யாத நிலையில் வடமாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று" தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது கூட்டமைப்பின் கடமை என்னும் வகையில் இந்த அறிக்கையோடு மட்டுமல்ல தொடர்ச்சியாக அதற்காக பலவித முயச்சிகளிலும் இறங்க வேண்டும். காணி போலிஸ் அதிகாரங் களுக்கு எதிராக குரல் எழுப்பும் கட்சிகளுடன் பேச்சுக்களை,உரையாடல்களை, பகிரங்க விவாதங்களை பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் "மாகாண சபைகளுக்கு வை.எல்.எஸ்.ஹமீட் போன்றவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை பொறுப்புடன் அணுக வேண்டும்.தமிழர்களின் கையில் போலிஸ் அதிகாரம் இருந்தால் தமது பாதுகாப்பு எப்படி உத்தரவாத படுத்தப்படும் என்று எழுப்பப்படுகின்ற

**மட்டுநகரிலிருந்து**
**எழுகதிரோன்**

(கடந்த காலங்களில் பட்டுதேறிய)ஒரு சிறுபான்மை இனத்தின் குரல்களை இது

**புலம் பெயர் தமிழர்கள் நாடு கடந்து செய்யும் கோமாளித்தனங்கள் இலங்கையில் மீளுயிர்ப்பு பெற்று வருகின்ற தேசிய ஒற்றுமைக்கும் இனங்களிடையேயான பரஸ்பர நல்லுறவுக்கும் பங்கம் விளைவிக்கின்றன என சுட்டிகாட்ட வேண்டிய அவசியம் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்காளர்களினால் தெரிவான பிரதிநிதிகள் எனும் வகையில் கூட்டமைப்பினருக்கு உண்டு**

இனங்களிடையேயான பரஸ்பர நல்லுறவுக்கும் பங்கம் விளைவிக்கின்றன என சுட்டிகாட்ட வேண்டிய அவசியம் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்காளர்களினால் தெரிவான பிரதிநிதிகள் எனும் வகையில் கூட்டமைப்பினருக்கு உண்டு. அதே போன்று இன்னும் இயங்குவதாக காட்டிகொள்ளும் சர்வதேச புலி பினாமிகள் குறித்தும் கண்டனம் தெரிவிக்க கூட்டமைப்பினர் முன்வரவேண்டும். அந்த தார்மிக உரிமை இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்னும் வகையில் கூட்டமைப்பினருக்கு உண்டு. இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்டு வரும் சமுக, பொருளாதார, அரசியல் முன்னேற்றங்களுக்கு தடையாக இருக்கும் சிங்கள இனவாதிகளை மட்டுமல்ல தமிழ் பிரிவினைவதிகளையும் நாம் அடையாளம் காண வேண்டும்.எங்களிடம் பிரிவினை வாதமோ பயங்கர வாதமோ இல்லை என்று நிருபிக்க வேண்டிய கடப்பாடு அகிம்சை பேசும் கூட்டமைப்புக்கு உண்டு. அதுவே எதிர்கால நல்லிணக்கத்துக்கு வழிகோலும் சிறந்த ஆயுதமாகும். இதற்கெல்லாம் கூட்டமைப்பினருக்கு நேரம் கிடைக்குமா? தமது உள்கட்சி பூசல்களில் சிக்கித்தவிக்கும் கூட்டமைப்பினர் மக்களிடம் இழந்து வரும் தம்மீதான நம்பகத்தன்மையை சீர்செய்து கொள்ள வட மாகாண சபைக்கு போதிய அதிகாரங்களை பெற்று கொள்ளும் முயற்சியில் தமது இராஜ தந்திரத்தை நிரூபி ப்பது ஒன்றே வழியாகும். நிரூபிப்பர்களா? கோட்டைவிடுவர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியச் செய்திகள்

# இந்தியா - வியட்நாம் கடல் வணிக ஒப்பந்தம்!

இந்தியா - வியட்நாம் இடையே கடல்வழி வணிகத்தை மேம்படுத்தும் வகையில், வியட்நாம் சென்றுள்ள அமைச்சர் ஜி.கே. வாசன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.




மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் இப்பொழுது அலுவல் சுற்றுப் பயணமாக, மே மாதம் 23ம் தேதி வியட்னாம் நாட்டிற்கு சென்றுள்ளார். அமைச்சருடன், கப்பல்துறை செயலாளர் பி.கே. சின்ஹா, உள்நாட்டு நீர்வழித்துறை தலைவர் விஸ்வபதி த்ராவேதி, கப்பல்துறை இயக்குநரக அதிகாரி கௌதம் சாட்டர்ஜி, கொச்சின் கப்பற்கூடத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சுப்பிரமணியம் ஆகியோர் குழுவும் சென்றுள்ளது.

ஜி.கே. வாசன், வியட்நாம் நாட்டு போக்குவரத்துத்துறை அமைச்சர் டின் லா தாங்கை சந்தித்து, கடல்சார் துறையில், முக்கியமாக கப்பல் போக்குவரத்து, கப்பல் கட்டுமானம் மற்றும் சீரமைப்பு, துறைமுக நிர்வாகம், துறைமுக பாதுகாப்பு, துறைமுக இணைப்பு, மனிதவள மேம்பாடு, மற்றும் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து போன்ற துறைகளில் இரு நாடுகளின் உறவை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டு, இரு அமைச்சர்களும், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

வாசன், வியட்நாம் நாட்டு பிரதமர் கையன் டான் டங்கை வெள்ளியன்று சந்தித்தார். இந்த சந்திப்பில், பிரதமரும், ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.

வாசன் அடங்கிய குழு, ஆய் பாங் துறைமுகம், நாம் ட்ரியு கப்பல் கட்டுமானக் கூடம் போன்ற இடங்களை பார்வையிட்டனர். இதன் தொடர்ச்சியாக, 28ம் தேதி இந்தியா திரும்புவதற்கு முன்பு, ஹோ ச்சி மின் நகரத்தில் உள்ள உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தை, 26 மற்றும் 27ம் தேதிகளில் பார்வையிடவும் அமைச்சர் குழு திட்டமிட்டுள்ளது.

# பாடகர் ரிஎம்எஸ் காலமானார்!

பிரபல தமிழ் திரைப்பட பின்னணிப் பாடகர் டி. எம். சவுந்தரராஜன் அவர்கள் கடந்த சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

இதயக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் பின்னர் வீடு திரும்பியிருந்தார். இந் நிலையில் சனிக்கிழமை தனது வீட்டில் காலமானார்.

அவருக்கு வயது 91.

தென்னிந்திய திரையுலகில் அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக பின்னணி பாடி வந்த இவர், பட்டினத்தார் உட்பட சில திரைப் படங்களிலும் நடித்திருந்தார்.

1923 ஆம் ஆண்டு மதுரையில் சௌராஸ்டிர குடும்பத்தில் பிறந்த இவரது தகப்பனார் பெயர் மீனாட்சி ஐயங்கார். 1950 ஆம் ஆண்டும் கிருஷ்ண விஜயம் என்னும் படத்தில் 'ராதே என்னை விட்டுப் போகாதடி'' என்னும் பாடலுடன் இவர் அறிமுகமானார்.

தமிழ் தவிர தெலுங்கு மலையாளம் ஆகிய மொழிகளிலுமாக 10, 000 பாடல்களுக்கும் அதிகமாக அவர் பாடியிருக்கிறார்.

1950-ம் ஆண்டு கிருஷ்ண விஜயம் படத்தில் 'ராதே உனக்கு கோபம் ஆகாதடி' என்ற பாடலைப் பாடி திரை இசைப்பாடகராக அறிமுகமானார் டி.எம். சவுந்தரராஜன். அதன் பிறகு பல்லாயிரம் பாடல்களை பாடி தனது கணீர் கம்பீர குரலால் இசை ரசிகர்களின் இதயங்களில் குடி கொண்டார். 2003-ம் ஆண்டு பத்மஸ்ரா விருது பெற்ற இவர், ஏராளமான மாநில அரசின் விருதுகளையும் பெற்றுள்ளார். தமிழ் திரையுலக ஜாம்பவான்களான எம்.ஜி.ஆர்., சிவாஜி மற்றும் ஜெமினி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், ஜெய்சங்கர்,



ரவிச்சந்திரன், முத்துராமன், நாகேஷ், ரஜினிகாந்த், கமல்ஹாஸன் என அனைத்து பிரபலங்களுக்கும் குரல் கொடுத்துள்ள டி.எம். சவுந்தரராஜன் ஆயிரக்கணக்கான பக்தி மற்றும் மெல்லிசை பாடல்களையும் பாடியுள்ளார். 2012-ம் ஆண்டு ஏ.ஆர். ரகுமான் இசையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்காக உருவான 'செம்மொழியான தமிழ் மொழியாம்' என்ற பாடல்தான் டி.எம்.சவுந்தரராஜன் குரலில் பதிவான கடைசி பாடல் என்பது குறிப்பிடத்தக்கது. மறைந்த டி.எம்.சவுந்தரராஜனின் உடல் மந்தைவெளியில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. திரையுலகைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்களும், முக்கிய பிரமுகர்களும் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர். டிஎம் சவுந்திரராஜன் மறைவுக்கு முதல்வர் ஜெயலலிதா ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

## அப்துல் கலாமுக்கு அமெரிக்க விருது

அமெரிக்காவில் இருந்து இயங்கும் தேசிய விண்வெளி சமூகத்தின் சார்பில் அளிக்கப்படும் வெர்ன்ஹர் வோன் ப்ரவுன் நினைவு விருது முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு வழங்கப்பட்டது.

சான் டியாகோவில் நடைபெற்ற விழாவில், விண்வெளித் துறையில் கலாம் ஆற்றிய பணிக்காகவும், விண்வெளித் துறைக்கான குழுவை அமைத்து அதில் சிறப்பாக தலைமைப் பணி ஆற்றியதற்காகவும் இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் நிகழ்ச்சியில், வரிய சக்தி உள்ளிட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றி அப்துல் கலாம் உரையாற்றினார்.

## உலகைச் சுற்றியதில்

# காந்தியின் நினைவுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனை!

மகாத்மா காந்தியின் கடைசி உயில் 55,000 ஸ்டெர்லிங் பவுண்டுகளுக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.



காந்தியின் இரத்த மாதிரி உட்பட அவரது நினைவுப் பொருட்களாக இருக்கும் சுமார் 50 பொருட்களில் இந்த இரு பக்க ஆவணமும் அடங்குகிறது.

காந்தியால் குஜராத் மொழியில் கையெழுத்திடப்பட்ட அந்த உயிலின் ஆரம்ப விலையாக 30,000 முதல் 40, 000 ஸ்டெர்லிங் பவுண்டுகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அவரது மிதியடி ஒன்று 19,000 பவுண்டுகளுக்கு விற்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அது £9,000 அதிகமாகும்.

அவருக்கு 1920களில் செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒரு குடல்வால் அறுவைச் சிகிச்சையின் போது கிடைத்த ஒரு அவரது இரத்த மாதிரி விற்பனையாகவில்லை என்று அவற்றை ஏலத்தில் விட்ட முல்லொக் ஏல விற்பனையாளர்கள் கூறியுள்ளனர்.

1932இல் காந்தியை பயங்கரவாதியாக அறிவித்த அபூர்வமான பிரிட்டிஷ் நாடாளுமன்ற அறிக்கை ஒன்று £260க்கு விற்பனையானது.

## இயற்கையை பாதுகாக்க கூட்டு முயற்சி அவசியம்

இயற்கை நீர் வளங்களைப் பாதுகாப்பதற்கும், அவை குறித்த புரிதல் ஏற்படுவதற்கும் அறிவியல் ரீதியான கூட்டுமுயற்சி இன்றியமையாதது என்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் கூறியுள்ளது.

அனைத்துலக உயிரினப் பன்மைத்தன்மை நாளையொட்டி செய்தி வெளியிட்ட ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன், தண்ணீருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை அதிகரித்து வரும் ஓர் உலகத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம், தற்போதைய நிலை நீடித்தால், தண்ணீருக்கான வருங்காலத் தேவைகள் நிறைவேற்ற ப்படாமல் விடப்படும் என்று எச்சரித்துள்ளார்.

தண்ணீர்ப் பற்றாக்குறை ஏறக்குறைய ஒவ்வொரு கண்டத்தையும் பாதித்துள்ளது மற்றும் இப்பூமியில் 40 விழுக்காட்டுக்கும் மேற்பட்ட மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என்று ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் கூறியுள்ளது.

தண்ணீரும் உயிரினப் பன்மைத்தன்மையும் என்ற தலைப்பில் இவ்வாண்டின் இவ்வுலக தினம் கடைப்பிடிக்கப்பட்டது.இப்பூமியிலுள்ள மொத்தத் தண்ணீரின் அளவில், 2.5 விழுக்காடு சுத்தத் தண்ணீர் என்று ஐ.நா. சுற்றுச்சூழல் நிறுவனம் கூறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபையை திரிபுபடுத்த புதிய சட்டமூலம் கொண்டுவர முயற்சி!

அரசாங்கம் வட மாகாண சபையை திரிபுபடுத்த புதிய சட்டமூலம் ஒன்றை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
கொழும்பு பான்ஸ் பிளேஸில் கடந்த வாரம் புதன்கிழமை இடம்பெற்ற அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை கட்டியெழுப்பும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தாம் தற்போது வசிக்கும் பிரதேசங்களில் இருந்து கொண்டே வாக்களிப்பதற்கு அரசாங்கம் ஒரு யோசனையை முன் வைத்துள்ளது.
இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும்.
இந்நிலையில் தேர்தல் இடாப்பில் பெயர் பதியப்படாதிருந்தாலும் 1983 ஆம் ஆண்டுக்கு முதல் அவர்கள் வடக்கில் வசித்திருந்தால் அவர்கள் வாக்களிக்க முடியும் என்றதொரு சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஊடாக சமர்ப்பிக்கவுள்ளது.
இச் சட்டமூலம் மிகவும் கொடுமையானதாகவும் ஜனநாயகத்தை தலைகீழாக கவிழ்க்கும் வகையிலுமே அமையவுள்ளது.
குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோல்வியடையச் செய்யும் நோக்கமே அரசாங்கத்திற்கு உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

# காவலூர் அந்தோனியார் ஆலயமும் நினைவுச் சின்னம்!



யாழ். குடாநாட்டின் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் அந்தோனியார் ஆயர் இல்லம் உட்பட ஐந்து இடங்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக மாற்றுவதற்கு தேசிய மரபுரிமைகள் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.
நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் சாரபிட்டி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள புராதன குதிரைகள் லயம், கந்தரோடை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கதுருகொட குடியேற்றம், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள புனித மாட்டீனார் மிசனறிக் கட்டிடம் ஆகியனவே புராதன பொருட் கட்டடச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக மாற்றப்படவுள்ளன.
மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களையும் புராதர நினைவுச் சின்னங்களாக மாற்றுவதற்கு ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்னர் தொல்பொருள் பணிப்பாளர் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலத்தில் அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் மேலும் கூறினார்.

## பாரிய விலைகொடுத்தே சுதந்திரத்தைப் பெற்றோம்! சவேந்திர சில்வா கூறுகிறார்!!

பாரிய விலையைக் கொடுத்தே இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டோம் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைவதனை முன்னிட்டு நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் மேற்கொண்டவர்களை மறந்து விடக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காவிரி கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்னோடியாக, காவிரி கண்காணிப்பு குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இதில், காவிரி நதிநீர் பங்கீட்டில் சம்பந்தப்பட்ட தமிழகம், கர்நாடகா உட்பட 4 மாநிலங்களின் தலைமை செயலாளர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2007ம் ஆண்டு காவிரி நடுவர் மன்றம் அளித்த இறுதி தீர்ப்பில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உத்தரவிடப்பட்டது.
இந்த தீர்ப்பு கடந்த பிப்ரவரி 19ம் தேதி மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இதை தொடர்ந்து, காவிரி மேலாண்மை வாரியத்தையும் காவிரி ஒழுங்கு முறை ஆணையத்தையும் உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது.
இந்த வழக்கு கடந்த 10ம் தேதி நீதிபதிகள் ஆர்.எம். லோதா, குரியன் ஜோசப் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் குரு கிருஷ்ண குமார், ஜூன் மாதத்தில் பயிர் சாகுபடி தொடங்க இருப்பதால், இந்த 2 குழுக்களையும் மத்திய அரசு எப்போது அமைக்கும் என்பதையும், எவ்வளவு அவகாசம் தேவை என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
இரு தரப்பு வாதங்களை யும் கேட்ட நீதிபதிகள், 'காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரை தற்காலிகமாக காவிரி கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும். தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மற்றும் கர்நாடகாவை சேர்ந்த தலைமை செயலாளர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். குழுவுக்கு மத்திய நீர்வளத் துறை செயலாளர் தலைமை ஏற்க வேண்டும்' என்று உத்தரவிட்டனர்.
அதன்படி, காவிரி கண்காணிப்பு குழுவை மத்திய அரசு கடந்த வாரம் அமைத்தது. இக்குழுவில் தமிழகம், கர்நாடகா உட்பட 4 மாநிலங்களின் தலைமை செயலாளர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் முதல் கூட்டம், அடுத்த மாதம் 1ம் தேதி டெல்லியில் நடக்க உள்ளது. தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'காவிரி டெல்டா விவசாயிகள் நலனில் தமிழக முதல் வர் கொண்ட அக்கறையின் அடிப்படையில், இடைவிடாமல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் கிடைத்த வெற்றிதான் மத்திய அரசு அமைத்துள்ள தற்காலிக கண்காணிப்பு குழு' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி பொறியில் பீடம் விரைவில் திறக்கப்படுகிறது!

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் பொறியியல் பீடம் விரைவில் திறக்கப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள 2012ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.
யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் நிகழ்வு ஈரோவிலில் நடைபெற்றபோது, சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசத்தினம் இவ்வாறு தெரிவித்தார். 1.53 பில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டு வரும் பொறியியல் பீடமானது, விரைவில் திறக்கப்பட்டு மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர், வடமாகாணத்தில் இருக்கின்றவர்கள் வெளியிடங்களிற்குச் சென்று அங்குள்ள தொழில் முயற்சிகளையும், அவர்களின் தொழில் முயற்சிகளையும் அறிந்து அவற்றினை வடமாகாணத்தில் பிரயோகிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### 96 சதுர.. .(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்றப் பணிகளை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். மொத்தமாக 2064 சதுர கிலோ மீற்றர் பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும், இதில் 1968 சதுர கிலோமீற்றர் பரப்பில் கண்ணி வெடிகள் அற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இராணுவத்தினரும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இணைந்து 500,000 நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### சிறிலங்காவின்... .(12ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்காவுக்கு எந்த நேரத்திலும் நட்புக்கரம் நீட்ட இந்தியா தயாராகவே உள்ளது என்றும் அசோக் கே காந்தா குறிப்பிட்டார்.
வரும் செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்த சிறிலங்கா அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, அந்த மாகாணத்தில உள்ள பிரச்சினைகளுக்கு பெரியதொரு தீர்வாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### 13வது திருத்தச் . .(1ம் பக்கத் தொடர்ச்சி)

13ம் திருத்தச்சட்டமூலத்திலுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்கவேண்டும் என்று கோரிக்கை வைக்கும் கூட்டமைப்பினரே அதனை முன்னர் நிராகரித்தனர் என்பது தெரியவில்லை.

### இலங்கை.. (12ம் பக்கத் தொடர்ச்சி)


ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பெர்னாட் செவாஜ் தெரிவித்துள்ளார். 2005ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இலங்கைக்கு 587 மில்லியன் யூரோ நிதி உதவிகளை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருந்தது.
மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளது. இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு சிறந்த சாத்தியங்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வடக்கு . .(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக அமைச்சரின் நிலைப்பாடு குறித்து கேட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அதேவேளை 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தினதும் நிலைப்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இலங்கைக்கான உதவிகள் தொடரும்! ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு!!

இலங்கைக்கு தொடர்ச்சியாக நிதி உதவிகள் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது அறிவிக்கப்படாத போதிலும், நித உதவிகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டைப் போன்றே நிதி உதவிகள் வழங்கப்பட உள்ளதாக ஐரோப்பிய

(11ம் பக்கம் பார்க்க)

# ஐநா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தமிழ் கூட்டமைப்பு வலியுறுத்து!



**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை யதார்த்தமான முறையில் அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளினால் வடக்கு கிழக்கில் மனித உரிமை நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளின் மூலம் நல்லிணக்கத்தையும், குற்றச் செயல்களுக்கு த்ண்டனை விதித்தலையும் மேற்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## கூட்டமைப்பு பதிவு விவகாரம்: தமிழரசுக்கட்சி முடிவுசெய்யும்!

எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர், தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வது உள்ளிட்ட விடயங்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில், ரெலோ மற்றும் இலங்கை தமிழரசு கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் சுற்று இடம்பெற்றதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதன் போது, இந்த விடயங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் இணைந்து பேச்சு வார்த்தை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் எதிர்வரும் ஜுன் மாதம் வவுனியாவில் நடை பெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர், கட்சிப் பதிவு தொடர்பில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்காவின் உறுதித்தன்மையை இந்தியா தொடர்ந்து பாதுகாக்கும்!

சிறிலங்காவில் அரசியல் மற்றும் பொருளாதார உறுதித் தன்மையை தொடர்ந்து பாதுகாக்க இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பிரதமரின் இல்லத்தில் அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஒன்றுப்பட்ட சிறிலங்காவின் சார்பாகவே இந்தியா செயற்படும் என்றும் அதன் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக முன்னிற்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(11ம் பக்கம் பார்க்க)

## வருட இறுதிக்குள் புனர்வாழ்வு முகாம்கள் அனைத்தும் மூடப்படும்!

இந்த வருடம் இறுதிக்குள் புனர்வாழ்வு முகாம்கள் அனைத்தும் மூடப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சரணடைந்தவர்கள் மற்றும் கைது செய்த முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

அதன்படி தற்போது புனர்வாழ்வு பெற்றுவருகின்ற முன்னாள் போராளிகள் 340 பேரையும் இந்த வருட இறுதிக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகமயப்படுத்தல் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக, வவுனியா மருதமடுவில் இயங்கிவந்த புனர்வாழ்வு முகாம் மூடப்பட்டுள்ளது.அதன்படி இந்த முகாமில் புனர்வாழ்வு பெற்றுவந்த 100 முன்னாள் போராளிகளும் பூந்தோட்டம், சேனதுறை மற்றும் கந்தக்காடு ஆகிய புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றபட்டுள்ளனர்.இதனடிப்படையில் தற்போது மூன்று புனர்வாழ்வு முகாம்களே இயங்கி வருகின்றன. பூந்தோட்டம் முகாமில் 122 பேரும், சேனதுறை முகாமில் 119 பேரும், கந்தக்காடு முகாமில் 99 பேரும் என 340 முன்னாள் போராளிகள் தொடர்ந்து புனர்வாழ்வு பெற்று வருகின்றனர் என அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 24 முகாம்கள் இயங்கி வந்தன. அங்கு புனர்வாழ்வு பெற்றுவந்த முன்னாள் போராளிகள் இதுவரை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாரிஸ் யுனெஸ்கோ: வெசாக் கொண்டாட்டங்கள்!

2013 ஆம் ஆண்டிற்காக வெசாக் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் பாரிஸில் அமைந்துள்ள யுனெஸ்கோ மண்டபத்தில் கடந்த வாரம் இரு நாட்கள் முறையே 23,24 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டங்களில் பங்கெடுப்பதற்காக இலங்கையிலிருந்து நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ச பிரான்சுக்கு வருகை தந்திருந்தார். உலகளாவிய ரீதியில் சர்வமத தலைவர்கள் விசேட பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்த வெசாக் கொண்டாட்டங்கள் உலக சமாதானம் என்ற தொனிப்பொருளை கொண்டிருந்தது.


பௌத்த மதத்தை கடைப்பிடிக்கும் நாடுகளான இலங்கை, இந்தோனேஷியா,சீனா, தாய்லாந்து,வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்த கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டார்கள்.

பகல் வேளைகளில் அந்தந்த நாட்டிற்கான கலாச்சார மத நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வெசாக் தினம் நினைவு கூரப்பட்டது.


24 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு பல்வேறுபட்ட பௌத்த சமூகங்களின் பாரம்பரிய கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வுகளாக பூஜா நடனம் , பரதநாட்டியம்,சீன நடனம், தாய்லாந்து நடனம், இலங்கையர் பக்தி கீதம், நடனம், இந்தோனேசிய நடனம், இலங்கையின் இயற்கை வனப்பை வர்ணித்து சுவிஸ்நாட்டைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்விட்ஸ் பாடிய கீதம், வியட்நாமிய நடனம், இலங்கையின் பாரம்பரிய கண்டி நடனம் ஆகியவை இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளில் தூதுவராலயங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பாரிஸ் வாழ் இலங்கை, இந்தியா, தாய்லாந்து, வியட்நாம் மக்கள் கலந்து கொண்டனர்.






சபாநாயகர் சமல் ராஜபக்ச




பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் கருணாரட்ண



யுனெஸ்கோ தலைமையதிகாரி போகோவா

PRINTED BY MULTI LINES ADVERTISING (PVT) LTD



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org